பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 18 வியாழக்கிழமை | 05.10.2023 | கதிர் 328

# சர்வதேசத்திடம் கையேந்தியபோது 2ஆம் நிலை எண்ணம் இல்லையா?

## ஜனாதிபதியைப் பார்த்து சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் ஆவேசம்

சர்வதேசத்திடம் கையேந்தும்போது ஜனாதிபதிக்கு இரண்டாம் நிலை என்ற எண்ணம் தோன்றவில்லையா? உள்ளக விசாரணையில் நீதி கிடைக்காத காரணத்தால்தான் சர்வதேச விசாரணையை கோருகிறோமென இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

சட்டமா அதிபர் உட்பட உயர் அதிகாரிகளின் அழுத்தங்களினால் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தனது குடும்பத்தாரின் பாதுகாப்பு ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ்'க்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற பின்வரிசை உறுப்பினர் லலித் எல்லாவல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிகிறது.

நாட்டில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை அதிகரித்திருப்பது, போதைப் பெரருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையிலான மோதல்களில் பலரும் கொல்லப்படுவது, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பது என்று பொதுமக்களின் பாதுகாப்புக் கடுமையாகக் கேள்விக்குறிக்குள்ளாகி இருக்கும் நிலையில், ரிரான் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது என்று பயன்தரும் என்ற எதிர்பார்ப்பில் இந்த முயற்சி ☞ 2

## சூட்டுக் காயத்துடன் சிப்பாய்

(ச.தவசீலன்)

இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கி சூட்டுக் காயத்துடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ☞ 2

முல்லைத்தீவு நீதிபதி விவகாரம்

## கொழும்பு உயர் நீதிமன்றம் முன்பாக திங்களன்று கவனவீர்ப்பு போராட்டம்



முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டணத்தை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் ☞ 8

## மைத்திரியின் பொது மன்னிப்புக்கு எதிரான மனு விசாரணைக்கு ஏற்பு

பொது பல சேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அளித்த பொது மன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதாக உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா தலைமையிலான, யசந்த கோதாகொட, அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் நேற்று அறிவித்தது.

மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் ☞ 2

## நாட்டைக் கட்டியெழுப்ப வருமாறு எதிர்க்கட்சிக்கு ஜனாதிபதி அழைப்பு

நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் ஆளும் தரப்புடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

அத்துடன், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியன தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் விவாதிப்பதற்கு தயாராக இருப்பதாகவும், அந்நிதிகள் வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட ☞ 8

## மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் எண்ணம் மகிந்தவுக்கு இல்லை

### நேற்று அவரே தெரிவிப்பு

மீண்டும் ஆட்சிக்கு வரும் எதிர்பார்ப்பு தனக்கு இல்லையெனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய தலைமைத்துவத்துடன் கட்சியை ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச விசாரணையை நிராகரிக்கும் கருத்துக்களுக்கு வரவேற்பு வெளியிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை ஸ்ரீ சம்புத்தாலோக மகா விகாரைக்கு நேற்று ☞ 2

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி இருக்குமிடத்தில் சி.சி.ரிவி கமெராக்கள்

### பொருத்தும் பணி நடக்கிறது

(ந.லோகதயாளன்.)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைச் சூழவுள்ள பிரதேசத்தில் சி.சி.ரி.வி. கமெரா பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கும் காலம் அறிவிக்கப்படாத நிலையில், அப்பகுதியை தொடர் கண்காணிப்பில் வைத்திருக்கும் நோக்கிலும், அப் பகுதி தொடரபில் சந்தேகம் எழுவதனை ☞ 2

## 2024இல் 1.8 சதவீதம் மட்டுமே நாட்டின் பொருளாதார வளர்ச்சி

வருடத்தின் இறுதிக் காலாண்டில் பொருளாதார சுருக்கத்தைக் குறைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக தற்போது எதிர்வுகூறப்பட்டுள்ளதன்படி, 2024 ஆம் ஆண்டு 1.8 சதவீதம் அல்லது 1.9 சதவீதம் வரையிலான சாதகமான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் ☞ 8

## திடீர் வேலை நிறுத்தத்தால் ரயில் சேவைகள் பாதிப்பு

அனைத்து அலுவலக ரயில்களின் சேவைகளையும் இரத்துச்செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று மாலை முதல் ரயில்வே கட்டுப்பாளர்கள் ஆரம்பித்த திடீர் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுக் காலையில் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் உப ரயில் ☞ 2

## கொடுப்பனவு தாமதம்

(ந.லோகதயாளன்.)

கொக்குத்தொடுவாயில் பணியாற்றிய அதிகாரிகளின் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகல்வில் பணியாற்றிய அதிகாரிகளிற்கான கொடுப்பனவிற்கான சிட்டைகள் தயார் செய்து வழங்கிய போதும் அதற்கான பணம் இதுவரை கிடைக்கவில்லையென மாவட்டச் செயலகம் தெரிவிப்பதனால் கொடுப்பனவுகள் தாமதமடைவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் மாவட்டச் செயலக அதிகாரிகளிடம தொடர்பு கொண்டு இப்பணிக்கான பணம் ஏற்கனவே பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதே என்று கேட்டதற்கு,

இந்தச் செலவிற்கான அனுமதிகிணைத்திருந்த போதும் இதற்கான ☞ 2

## சிறுவர் பாதுகாப்பு, நல்வாழ்வுக்கான ஆணைக்குழு அறிக்கை கையளிப்பு

இந்நாட்டு சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்கில் ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

பல்வேறு பிரச்சினைகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் முழுமையான நலன்புரிகள் தொடர்பில் பரந்த ஆய்வொன்றை மேற்கொண்டு பரிந்துரைகளை முன்மொழிவதற்காக 2023 ஏப்ரல் 19 ஆம் திகதியன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய மேற்படி குழு நியமிக்கப்பட்டிருந்தது.

'திரிய பியச' பொறுப்புநிதியத்தினதும் எக்ரோமாட் அவுட்ரிச் மன்றத்தினதும் ☞ 2

## லிற்றோ மற்றும் லாஃப் எரிவாயுக்களின் விலைகள் நள்ளிரவு முதல் அதிகரிப்பு

லிற்றோ எரிவாயுவின் உள்நாட்டு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள லிற்றோ தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் லிட்ரோ தலைவர் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்.

விலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வருமென குறிப்பிட்ட அவர், 12.5 கிலோ கொள்கலன் எரிவாயுவின் விலை 343 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 3,470 ரூபாவாகும்.

5 கிலோ கொள்கலன் எரிவாயுவின் விலையானது 137 ரூபாவால் அதிகரித்து புதிய விலை 1,393 ரூபாவாக காணப்படவுள்ளதோடு, 2.3 கிலோ 63 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 650 ரூபாவாகும்.

உலக சந்தையில் நிலவும் தற்போதைய ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

முன்னெடுக்கப்படுகின்றது.

ரிரான் அலஸும் லலித் எல்லாவலவும் முன்னாள் சகபாடிகள். இருவரும் சிறீலங்காபொதுஜனபெரமுன ஊடாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். ஆனால் அரகலயவுக்குப் பின்னர் ரிரான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும்லலித் சுதந்திர மக்கள்சபையுடனும் நிற்கின்றார்கள்.

தேர்தல் வரப்போகும் நிலையில் ரிரானுக்கு எதிராக முன்வைக்கப்படப் போகும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதில் இருந்து ஆளும்தரப்புஉறுப்பினர்கள் பலர் பின்வாங்குவார்கள் என்கிற எதிர்பார்ப்பே இந்த முயற்சிக்குஅடிப்படைஎன்று தெரிவிக்கப்படுகின்றது. சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலியரம்புக்வெலவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஆளும் தரப்பு வெற்றி பெற்றாலும், ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் கடும் சரிவு காணப்பட்டது. அத்தோடு ஆளும் தரப்பின் சட்ட வரைவுகளுக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையும்103என்கிற அளவிற்குக் குறைந்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பில்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கியூபாவிற்குப் புறப்படுவதற்கு முன்பாக பொது ஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்ஷவை அழைத்துப் பேசியிருந்தார். ஆளும்தரப்புக்கு ஆதரவளிக்கும்நாடாளுமன்ற உறுப்பினர்கள்முக்கியமான தருணங்களில்வாக்களிப்புக்கு வராமல் தவிர்த்துவிடுவது தொடர்பில் அப்போது ஜனாதிபதியால் பஸிலுக்கு எடுத்துரைக்கப்பட்டிருந்தது.

டிரான் அலஸ் விடயத்திலும், மக்களின் எதிர்ப்பைச் சந்தித்துக்கொள்ள விரும்பாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது விலகியிருப்பார்கள்என்கிறஎதிர்பார்ப்பிலேயேநம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இதற்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளது என்ற தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேசத்திடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதிபதவியைஇராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். நீதிபதிக்குவிடுக்கப்பட்டஉயிர் அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட வர்த்தகசங்கத்தினர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினர் உட்பட கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கங்கள் பல இணைந்து கடந்ததிங்கட்கிழமைஎதிர்ப்பு போராட்டத்தைமுன்னெடுத்து கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட பிரதிநிதியிடம் வலியுறுத்தல் மனுவை சமர்ப்பித்துள்ளன.

சர்வதேசவிசாரணைக்கு ஒருபோதும்இடமளிப்பதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகத்துக்கு மிடுக்காக குறிப்பிட்டுள்ளமைஅவதானத்துக்குரியது.

உள்ளகவிசாரணையில் சரியான மற்றும் நியாயமான நீதி கிடைக்காத காரணத்தால்தான் சர்வதேச விசாரணையைத்தொடர்ந்து கோருகிறோம்என்பதைஅரச தலைவர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஜேர்மனிய ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு'நாங்கள்என்னஇரண்டாம் தரப்பினரா (செகன்ட் கிளாஸ்) என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆத்திரமடைந்து பதிலளிக்கிறார்.

சர்வதேச நாடுகளிடம் கையேந்தும்போது இந்த இரண்டாம்தரப்பினரா என்ற நிலைஏன்தோன்றவில்லை? அதேபோல் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், தமிழர்களை கொன்று குவிப்பதற்கும் உலக நாடுகளிடம் நிதி மற்றும் ஆயுதம் பெற கையேந்தும்போது இரண்டாம் தரப்பினர் என்ற எண்ணம் தோன்றவில்லையா?

நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினை என்ன? பிரச்சினையின் ஆணி வேர் என்ன? என்பதை அரச தலைவர்கள் ஆராயாமல் இருக்கும் வரை இந்த நாடு எவ்வாறு முன்னேற்றமடையும்? நாட்டின் சுகாதாரத் துறை பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இலவச சுகாதாரத் துறையில் எதிர்காலம் தொடர்பில் அரச மருத்துவ சங்கத்தினர்ஆளும்தரப்புக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், ஆளும் தரப்போ எதிர்ப்பு அறிவிப்புக்களை மாத்திரம் வெளியிடுகிறதே தவிர பிரச்சினைகளுக்கு தீர்வு காணவில்லை.

கொழும்பில் உள்ள கனடா, பிரித்தானியா உட்பட சகல தூதுவராலயங்கள் மற்றும் உயர்ஆணையர் அலுவலகங்கள் முன்பாக இளைஞர்கள் நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த நாட்டுக்காவது செல்லவேண்டும் என்பதே இளைஞர்களின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. தமிழர்கள் மட்டுமல்ல, சிங்களவர்களும் முஸ்லிம்களும் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். குறிப்பாக, படித்த சமூகத்தினர் விரைவாக நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

போரை முடிவுக்கு கொண்டு வந்துவிட்டோம், ஆசியாவின் ஆச்சரியம் என்று குறிப்பிட்டுக் கொண்டு விட்டோம் என மார்தட்டிக் கொள்ளும் ஆட்சியாளர்கள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவில்லை.

மாறாக, இந்து ஆலயங்களை அழித்து அங்கு விகாரைகளைக் கட்டுவதற்கு தனியான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான மனநிலையில் எவ்வாறுமுன்னேறமுடியும்?

நாட்டின் தொழிற்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கு மற்றும்கிழக்கு மாகாணங்களில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டத்தில் பெரும்பாலான ஆடை தொழிற்சாலைகள் நெருக்கடிக்குள்ளாக் கப்பட்டுள்ளன. பொருளாதார மீட்சி என்று ஆளும் தரப்புக் குறிப்பிடுகிறது. ஆனால், நாட்டின் பொருளாதார நிபுணர்கள்கூட நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

வங்குரோத்து நிலைக்கு மத்தியிலும் இனவாத செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. கௌதம சித்தார்த்தனின் போதனைகளைபறைசாற்ற வேண்டிய பௌத்த பிக்குகள் இனவாதத்தை பறைசாற்றி ஆவேசமாகச் செயற்படுகிறார்கள். இனவாதத்தைமுன்னிலைப் படுத்திக் கொண்டு செயற்பட்டால் எவர் ஆதரவு வழங்குவார்?

இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தமிழர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழர்களின் நிலைப்பாட்டுக்குமதிப்பளித்து நீதியானதீர்வைவழங்கினால் சர்வதேசத்தில் சாதிக்கும் தமிழர்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள் - என்றார்.

## திடீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டாளர்மீதுதாக்குதல் நடத்தியமையின்காரணமாக உடனடி பணிப்பகிஷ்ரிப்பை முன்னெடுக்க வேண்டி ஏற்பட்டதாக ரயில்வே கட்டுப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து ரயில் நிலையஅதிபர்கள்சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்ததாவது:

உபரயில்கட்டுப்பாட்டாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையின் காரணமாக, ரயில் நிலைய கட்டுப்பாட்டாளர்கள் செயற்பாடுகளை புறக்கணித்தனர். இதனால் அனைத்துரயில்கள்பராமரிப்பு பிரிவுகளில்இருந்தும்ரயில்கள் வெளியேறுகின்றமை தற்காலிகமாக தடைப்பட்டது. இதனால் ரயில்களை இயக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது -என்றார்.

இந்நிலையில் கொழும்பு கோட்டை பிரதான ரயில் நிலையம்உட்படஅனைத்து ரயில் நிலையங்களிலும் பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளமையால் பெருவாரியான மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்ததுடன், அதிகாரிகளுடன் தர்க்கங்களிலும் ஈடுபட்டனர்.

அதனையடுத்து, கொழும்புகோட்டைபிரதான ரயில் நிலையம் உட்பட அனைத்து ரயில் நிலையங்களிலும் பொலிஸாரும், விசேடஅதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர்சட்டத்தரணி நிஹால்தல்தூவதெரிவித்தார்.

## மைத்திரியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி சந்தியா எக்னெலிகொட ஆகியோர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இரு மனுக்களையுமே விசாரணைக்குஏற்றுக்கொண்டுள்ள நீதிமன்றம்எதிர்வரும் 2024 மே6ஆம்திகதிவிசாரணைக்கு திகதியிட்டுள்ளது.

அத்துடன், அரசமைப்பின் ஊடாக உறுதி செய்யப்பட்ட சட்டத்தின் முன் அனைவரும் சமன் எனும் 12 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இரு மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதாக உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றை அவமதித்ததாக கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அனைத்து குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவரை குற்றவாளியாக கண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் 19 வருட சிறைத் தண்டனை விதித்து கடந்த 2018 ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

குறித்த தண்டனையை ஞானசார தேரர் அனுபவித்து வந்த நிலையில், 2019 மே மாத நடுப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன, அந்தாண்டு மே 22 ஆம் திகதி அவரை விடுவிப்பதற்கான ஆவணங்களில் கையெழுத்திட்டு மறு தினமான 23ஆம் திகதியே விடுவிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

## கொக்குத்தொ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்க்கும் வகையிலுமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது இந்த வகையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைச் சூழ கமராக்கள் பொருத்தும்பணிநேற்றுமுதல் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் நிறுவனம் இந்தப் பணிகளை முன்னெடுத்துள்ளது.

## கொடுப்பனவு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணம் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. இருந்தபோதும் மாற்று ஏற்பாடுகள் மூலம் நாளை (இன்று)இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனப் பதிலளித்தனர்.

## மீண்டும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபடச்சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்தார்.

கேள்வி:- உங்களுக்கு மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான எதிர்பார்ப்பு உள்ளதா?

பதில்:- அப்படி எதுவும் இல்லை. நான் நாட்டை போதுமான அளவு ஆட்சி செய்தேன். புதிய தலைமை உருவாகி முன்னேற வேண்டும்

கேள்வி: உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ளாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

பதில்:-அவரதுகருத்துடன் நான் உடன்படுகின்றேன். மக்கள் எதிர்பார்ப்பது ஒன்றுதான். அதனைத் தான் அவர் கூறியுள்ளார்.

கேள்வி:- உங்களைப் போன்றுதான்ஜனாதிபதியும் சர்வதேச ஊடகங்களிடத்தில் கடுமையாகக் கருத்து வெளியிட்டுள்ளார்?

பதில்:- அப்படியா!

கேள்வி: ஊடகங்களை தணிக்கை செய்ய இந்த ஆட்சி முயற்சிக்கிறதே?

பதில்:- அப்படியில்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்குயாரும்ஆதரவளிக்க மாட்டார்கள்.

கேள்வி:- ஆளும் தரப்புக்கான உங்களது கருத்து என்ன?

பதில்:- மக்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்கும் இந்த வேளையில் அவர்களுக்கு ஆதரவளிக்குமாறு ஆளும் தரப்பைவலியுறுத்துகின்றேன் கடந்த காலத்திலிருந்து நாங்கள் மக்கள் பக்கம்தான் இருந்தோம்

கேள்வி:- அனுப அரசியல்வாதியாக தற்போதைய நிலைமை தொடர்பில்ஆளும்தரப்பிற்கு சில ஆலோசனைகளை வழங்க முடியாதா?

பதில்:- ஆளும் தரப்பு என்னிடம் ஆலோசனை கேட்டால்,நிச்சயமாகஎன்னால் வழங்க முடியும். ஆனால் நான் அதை அவர்கள் மீது கட்டாயப்படுத்த முடியாது.

## சிறுவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் தலைவி சட்டத்தரணி ஏ.கே. வீரதுங்கவின் தலைமையிலான மேற் படி குழுவில், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி மனோஜ் பெர்னாண்டோ, கனேடிய உலகலாவியபல்கலைக்கழக சேவைப் பணிப்பாளர் மும்தாஸ் பலீல், பொலிடிக்ஸ் எஸ்எல்கே நிறுவன்தின் மூலோபாய நிபுணர் மலிதி ஹேரத், மகளிர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் அதிபர் மற்றும் கல்வி அறிஞர் நிர்மாலி விக்ரமசிங்க, குடும்பசுகாதார பணியகத்தின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான வைத்தியர் தில்ஷானி போகொல்லாகம, அபிவிருத்தி மற்றும் விஷேட தேவைகள் நிகழ்ச்சித் திட்ட சமூக வைத்திய நிபுணர் ஆசிரி ஹேவமல்கே, ஹேமாஸ் அவுட்ரிச் மன்றத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சிரோமி மாசகோரல, 'சேவ் தி சில்ட்ரன்' அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசகர் புத்தினி விதான, இலங்கையின் சிறுவர் நோய் வைத்தியநிபுணர் அஸ்வினி டீ பெர்னாண்டோ, யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு நிபுணர் வைத்தியர் ஹேமால் ஜயவர்தன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

விடயத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆழமான அறிவு மற்றும் நடைமுறைப் பரிந்துரைகளை தயாரிப்பதற்காக சுமார் ஐந்து மாத காலப்பகுதியில் 21 சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

நிறுவனச் சூழல், பெற்றோரின் அரவணைப்பு இன்மை, குடும்பப் பிரச்சினைகள், சமூக ஊடக பாவனை, சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில்பரந்தஅளவிலான விடயப்பரப்பு தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

அதேபோல் நவீன சமூகத்தின் தேவைகளை நிவர்த்திப்பதை இலக்காக கொண்டு சிறுவர் பாதுகாப்புக்காக இயங்கும் நிறுவனங்கள், நிர்வாகங்கள் மற்றும் சட்ட பாதுகாப்பின் போதுமான தன்மை தொடர்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது

மேலும் பல்வேறு விதமான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அனாதரவாக விடப்பட்ட சிறுவர்களின் உடல், உளச் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதனூடாக சிறுவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தி சிறுவர்பாதுகாப்புக்குஅவசியமானசமூகபங்களிப்புதொடர்பிலான புதிய பிரவேசங்கள் பற்றிய விடயங்களும் ஆராயப் பட்டுள்ளன.

சிறுவர்களுக்காக மேற்கொள்ளப்படும்நிறுவனம் சார்ந்த பாதுகாப்புக்களை மட்டுப்படுத்தி குடும்ப மட்டத்திலானபாதுகாப்பினை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கான சிறுவர்சீர்த்திருத்தஇல்லங்கள் மற்றும்மத்தியநிலையங்கள், அரசாங்கத்தின் அனுமதி பெற்றவிசேடபாடசாலைகளில் இருக்கும் மாணவர்களை சாதகமான முறையில் சமூகமயப்படுத்தும்நோக்கில் ' நலனூக்க புனர்வாழ்வு செயன்முறை' தொடர்பிலும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்க்கை திறனுக்காக வலுவூட்டல் மற்றும் மக்கள் பாதுகாப்பு திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையங்களில் இருக்கும் சிறுவர்களை சாதகமான முறையில் சமூகமயப்படுத்துவதற்கான பரிந்துரைகளும்அறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

சிறுவர்கள்பல்வேறுபட்ட வன்முறைகளுக்கு இலக்காகுவதற்கான வாய்ப்புகளை குறைத்தல் மற்றும் மட்டுப்படுத்தல், அவ்வாறான சிறுவர்கள் எதிர்கொள்ளும் வன்முறை வடிவங்களை அறிதல் மற்றும் அறிக்கையிடல், முகாமைத்துவ, பிரதிச் செயற்பாடுகளுக்கான பொறிமுறையை வலுவூட்டலுக்கான குறுகிய மற்றும் இடைக்கால, நீண்ட கால கொள்கை மற்றும் பரிந்துரைகளும்இந்தஅறிக்கையில் உள்ளடங்கியுள்ளன.

## சூட்டுக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயாறு பகுதியிலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் சிப்பாயே காயமடைந்துள்ளார். துப்பாக்கிதவறுதலாகவெடித்து அவர் காயமடைந்தார் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# பிளாஸ்டிக்கின் பயன்பாடு விரைவில் முடிவுக்கு வரும்

## அமைச்சர் நஷீர் தெரிவிப்பு



அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 'ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கின் புழக்கத்தை நாட்டில் முற்றிலுமாக அரசு நிறுத்தும் 'என சுற்றுச்சூழல் அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபைகளின் 5 ஆவது மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் பல்வேறு வகையான ஒரு தடவை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துவதற்குத் தடை விதித்து அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

'எங்கள் அரசாங்கம் ஒரு துணிச்சலான நடவடிக்கையை எடுத்துள்ளது. அடுத்த 2 ஆண்டுகளில், இந்த பூலோகத்தை அச்சுறுத்தும் பொருள்களின் சுழற்சியை முழுமையாகக் கட்டுப்படுத்தி, குறைத்துவிடுவோம் என நம்புகிறேன்' இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# மரத்தில் இருந்து விழுந்து மட்டு. இளைஞர் இறப்பு

மட்டக்களப்பு, மாவடிமுன்மாதிரி கிராமத்தில் மரத்தின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்த இளைஞன் எதிர்பாராத விதமாக கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனது சகோதரனுடன் தமக்கு சொந்தமான காணியைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே 28 வயதான குறித்த இளைஞர் இவ்வாறு உயிரிழந்துள்ளார். (05)



# ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கத்தை பறிகொடுத்த இலங்கை

சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வரும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டித் தொடரில் அஞ்சல் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை தன்வசப்படுத்திய இலங்கை, தட விதிமீறல் காரணமாக பதக்கத்தை இழந்துள்ளது.

4V400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியிலேயே இலங்கை வெள்ளிப் பதக்கத்தை வென்று, அதனை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் இணைந்த இலங்கை அணி வீரர் ஒருவர் மற்றொருவரின் பாதையைத் தொட்டதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போட்டியில் பஹ்ரைன் தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டு முதலிடத்தை பெற்றுக்கொண்டது.

வெண்கலப் பதக்கத்தை வெற்றிக் கொண்டு மூன்றாவது இடத்தை பெற்ற இந்தியா, இலங்கை அணி தகுதியற்றது என அறிவிக்கப்பட்டதை அடுத்து, வெள்ளிப் பதக்கத்திற்கு உரித்துடையாதாகியுள்ளது.

நான்காவது இடத்தை பெற்ற கஜகஸ்தான் மூன்றாவது இடத்திற்கு தகுதி பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக்கொண்டுள்ளது.

17 வருடங்களின் பின்னரே ஆசிய விளையாட்டுப் போட்டித் தொடரின், தடகளப் போட்டியில் இலங்கை அணி பதக்கத்தை வென்றிருந்தது.

இந்த நிலையில், இந்தப் பதக்கமும் தற்போது இழந்துள்ளமையால், இதுதொடர்பாக இலங்கை அணி, மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சீன அரசாங்கத்தினால் வீட்டுத் திட்டம்!

மேல் மாகாணத்தில் குறைந்த வருமானங் கொண்டவர்களுக்கு சீன அரசால் வீட்டுத் திட்டமொன்றை கொண்டுவர அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மேல் மாகாணத்தில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வசிக்கின்றவர்களை புனர்வாழ்வளித்து வசதிகளுடன் கூடிய நகர்ப்புற உத்தேச வீட்டுத்திட்ட முறையில் வீடுகளில் குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் மறுமலர்ச்சிக் கருத்திட்டத்திற்கான உதவித்தொகையாக 1,996 வீட்டு அலகுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்குவதற்கு சீனக் குடியரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்தக் கருத்திட்டத்தின் கீழ் காணி அபிவிருத்தி செய்தல் மற்றும் வேலைத்தளத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கை அரசாங்கம் வழங்கவுள்ளது.

அதற்கமைய, சீனக் குடியரசுடன் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# ராணுவம் வெளியேறிய காணிகளுக்கு வேலி அடைப்பதற்கு அனுமதி அளிப்பு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில், இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள காணிகளை உரிமையாளர்கள் வேலி அடைத்து அறிக்கைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும் குறித்த பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவில்லை.

அதனால் அந்தக் காணி உரிமையாளர்கள் அப்பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது. அந்நிலையில் அப்பகுதிக்குள் ஊடுருவும் இரும்பு திருடர்கள் வீடுகளில் உள்ள இரும்புகளைத் திருடிசென்றனர்.

அது குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலர், காங்கேசன்துறை பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்கு பலதடவைகள் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தும் திருட்டினை கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், இரும்பு திருடர்கள் சுதந்திரமாக அந்தப் பகுதிகளில் நடமாடி திரிகின்றனர்.

இந்நிலையில் காணி உரிமையாளர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம், தமது காணிகளுக்குள் ஊடுருவும் திருடர்களை கட்டுப்படுத்தும் முகமாக தமது காணிகளை சுற்றி வேலி அடைத்து, அக்காணிகளை அறிக்கைப்படுத்த அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதனை அடுத்து அப்பகுதியில் தமது காணிகளை சுற்றி வேலி அடைக்க பிரதேச செயலர் அனுமதி அளித்துள்ளார்.

அதேவேளை 33 வருட காலமாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்த மாங்கொல்லை வைரவர் ஆலய திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆலயத்துக்கு மின்சார இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# அரசியல் நியமன அடிப்படையிலேயே 70 சதவீதமான ஊழியர்கள் பதவியில்

## நாடாளுமன்றில் வெளிப்படுத்திய அமைச்சர் ஜீவன்

தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் உள்ள பெருமளவிலான ஊழியர்கள் அரசியல் நியமனங்களின் அடிப்படையில் சேவையில் இணைந்தவர்கள் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், சுமார் 70 விகிதமான ஊழியர்கள் திறமையற்றவர்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

பல துறைகளில் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இருந்தாலும் சில துறைகளில் ஊழியர்கள் அதிகளவில் இருப்பதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஆகவே புதிதாக ஊழியர்களை நியமிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். (05)



# பொருளாதார கணிப்புகளை உயர்த்தியது உலக வங்கி

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை, பணவீக்கத்தைக் குறைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளது என உலக வங்கி அறிவித்துள்ளது. சுற்றுலா வருவாய் மற்றும் அதன் நாணயத்தின் மதிப்பீட்டின் மூலம் இலங்கை பயனடைந்துள்ளது என்றும் உலக வங்கி கூறியுள்ளது.

ஆகவே முன்னதாக 2024 இல் ஒரு விகிதம் என மதிப்பிடப்பட்ட பொருளாதாரம் 1.7 விகிதம் விரிவடையும் என எதிர்பார்ப்பதாகவும் உலக வங்கி அறிவித்துள்ளது. எவ்வாறாயினும் இலங்கையின் கண்ணோட்டம் இன்னும் நிச்சயமற்ற தன்மையால் மங்கலாக இருப்பதாகவும் பாதகமான அபாயங்கள் இருப்பதாகவும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்பு சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவதைப் பொறுத்து நிலைமை மாறலாம் என்றும் உலக வங்கி அறிவித்துள்ளது. (05)

# பொலிஸ் சார்ஜன்ட் சாவு குறித்து நீதியான விசாரணை வேண்டும்

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் வேண்டுகோள்

பொலன்னறுவை - வெலிக்கந்தை பொலிஸ் நிலையத்தின் பொலிஸார் தங்கும் விடுதியில் இருந்து இரத்தம் தோய்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்டின் மரணத்தில் நீதி விசாரணை வேண்டுமென வலியுறுத்துவாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

வெலிக்கந்தைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஆக கடமையாற்றி வந்த ஏறாவூரைச் சேர்ந்த மக்பூல் முஹம்மது ஹனீபா (வயது 52) என்பவரின் சடலம் பொலிஸ் விடுதியிலிருந்து இரத்த வெள்ளத்தில் தோய்ந்தவாறு கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டிருந்தது.

பொலன்னறுவை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் செவ்வாய்க்கிழமை சட்ட வைத்திய நிபுணரால் உடற்கூராய்வு செய்யப்பட்டதன் பின்னர், அன்றைய தினம் இரவு ஏறாவூர் காட்டுப்பள்ளி மையவாடியில் பொலிஸ் மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.



சடலம் இரத்த வெள்ளத்தில் தோய்ந்திருந்ததை வைத்தும் சடலத்தில் காயம் இருந்ததாலும் இது கொலையாக இருக்கலாம் என உறவினர்கள் சந்தேகம் தெரிவித்திருந்த நிலையில், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் இரத்தப் போக்கு இடம்பெற்று மரணம் சம்பவித்திருப்பதாக பொலன்னறுவை சட்ட வைத்திய நிபுணர் யூ.எல். எம்.எஸ். பெரேராவின் உடற்கூராய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுநேர பொலிஸ் பாதுகாப்பிலுள்ள வெலிக்கந்தைப் பொலிஸ் வளாகத்திற்குள்ளேயே அமைந்துள்ள பொலிஸார் தங்கும் விடுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக கரிசனை எடுக்குமாறு மக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு இராஜாங்க அமைச்சர் டிரான் அலஸிடம் தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் டிலான் அலஸ் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார் எனவும் சுபைர் தெரிவித்தார். நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நீதியும் சீர்குலைந்து பொது மக்கள் அச்சத்துடனும் பீதியுடனும் அவநம்பிக்கையுடனும் வாழ ஒரு போதும் வழி சமைத்துவிடக் கூடாதென்றும் தான் இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தியதாக சுபைர் மேலும் தெரிவித்தார்.

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இரத்தப் போக்கு ஏற்பட்டு மரணித்த பொலிஸ் சார்ஜன்ட் கடைசியாக அவசர தொலைபேசி இலக்கமான 119 இற்கு மயில்கள் மற்றும் மான்கள் வேட்டையாடப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய பணிக்கப்பட்டதன் பேரில் சம்பவ இடத்திற்கு பொலிஸ் குழுவினருடன் சென்று கடமையில் ஈடுபட்டுத் திரும்பியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (05)

# சிறையிலிருந்து வெளியேறியவர் தங்க ஆபரணங்களுடன் கைது

சிறைச்சாலையில் 8 வருடகாலம் தண்டனை அனுபவித்து வெளியேறிய நபர் ஒருவர் 50 லட்சத்துக்கும் அதிக பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் தலங்கம, தலாகென, முல்லேரியா மற்றும் பேதியாகொடை போன்ற பகுதிகளில் ஆபரணங்களை கொள்ளையிட்டுள்ளார் எனத் தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, குறித்த சந்தேக நபரிடம் இருந்து 10.4 கிராம் ஐஸ் போதை பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த நபரை நேற்று (புதன்கிழமை) நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலின் மோசமான மாற்றம்

ஜேர்மனியில் உள்ள செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் கருத்துக்கள், அரசுத் தலைவர் தேர்தலுக்காக அவர் சிங்கள, பௌத்த இனவாத வாக்குகளைக் குறிவைக்கிறார் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

இந்த நேர்காணலில் ரணில் விக்கிரமசிங்க, இதற்கு முந்தைய தனது அரசியல் நிலைப்பாடுகளுக்கு முற்றிலும் மாறான – தலைகீழான – கருத்துக்களை வெளிப்படுத்தி தானும் ஓர் முழுமையான இனவாதி என்பதைக் காணப்பித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பன்னாட்டு மட்ட விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில், நேர்காணலை நடத்திய ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். பதிலளித்த அரசுத் தலைவர், அத்தகைய ஒரு வெளியக விசாரணையை அடியோடு நிராகரித்தார். அத்துடன் அந்தக் கேள்வியே ஒரு மேற்குலகச் சிந்தனை என்று சாடினார். ஆசியர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நோக்கும் மேற்கின் போக்கு என்று சீறினார்.

''ஜேர்மனிக்கு அப்படியான விசாரணை இல்லை, பிரிட்டன் மீதும் அத்தகைய விசாரணைகள் நடக்கவில்லை. பன்னாட்டு மட்டத்தில் அவர்கள் என்ன விசாரணைக்குச் சென்றார்கள்? அது ஏன் இலங்கையர்களுக்கும் ஆசியர்களுக்கும் மட்டும் அத்தகைய விசாரணைகள்? நாங்கள் இரண்டாம் தரக் குடிமக்கள் என்று நினைக்கிறீர்களா? இந்த மேற்கத்தைய மனோபாவத்தை நீங்கள் அகற்றவேண்டும். மேற்கத்திய ஊடகங்கள் எங்களை மோசமானவர்கள் என்று நினைக்கின்றன. கர்தினாலின் கூற்று என்று ஒரு துண்டுக் காகிதத்தைக் தூக்கிக்கொண்டு வந்து என்னிடம் கேள்வி கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. கேள்வி கேட்பதற்கல்ல என்னை ஓரங்கட்டுவதற்காகவே நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள்" என்றார் ரணில்.

இந்த மேற்கத்தைய மனோநிலையை அகற்றவேண்டும் என்றும் மேற்குலகு, இலங்கை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறுவதைத் தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார். பன்னாட்டு மட்ட விசாரணை ஒன்று இலங்கையில் நடக்காது என்றும் அவர் ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது ரணில் விக்கிரமசிங்க ஒன்றை மறந்துவிட்டார். பிரிட்டனிலோ அமெரிக்காவிலோ அல்லது வேறு எந்த மேற்குலக நாடுகளிலோ மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நீதியான விசாரணை நடக்கவில்லை என்று அந்த நாட்டு மக்கள் குற்றஞ்சாட்டவில்லை. அல்லது அப்படி நடக்கும் நீதி விசாரணைகளும் பக்கச் சார்பாக, அரசியல் தலையீடுகளுடன் நடப்பதாகக் குற்றஞ்சாட்டவில்லை. ஆனால் இலங்கையில் அப்படியல்ல. இங்கு உள்நாட்டு நீதியின் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை. அதிலும் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையில்லை. சுயாதீனமான, நேர்மையான, அரசியல் தலையீடுகளற்ற விசாரணை ஒன்று உள்ளூரில் நடக்கும் என்கிற நம்பிக்கை இல்லாத காரணத்தாலேயே பன்னாட்டு மட்ட விசாரணை கோரப்படுகின்றது.

அதற்குக் காரணம் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்களே. அவர்களுக்கு எதிராகவே குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் அரசுத் தலைவர்களால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளைக்கூட நடைமுறைப்படுத்தியதில்லை ஆட்சியாளர்கள். அதனால்தான் பன்னாட்டு விசாரணை இங்கு அவசியமாகின்றது. இந்த நாடு பௌத்த சிங்களப் பேரினவாதப் பிடியிலிருந்தே செயற்படுவதால்தான் இங்கு தமக்கு நீதி கிடைக்கவில்லை என்று தமிழ், முஸ்லிம் மக்களும் கிறிஸ்தவ மக்களும் நினைக்கிறார்கள். அதனால்தான் பன்னாட்டு மட்ட விசாரணை தேவை என்கிறார்கள்.

எந்த மேற்குலக நாடுகளில் இருந்தும் அத்தகைய குரல்கள் எழவில்லை. அங்கே மனித உரிமை மீறல்கள் குறித்து எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்கள் சுயாதீனமாக, அரசியல் தலையீடுகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்றன. தமது சொந்தப் படையினராக இருந்தாலும் மனித உரிமைகளை மீறியவர்களைத் தண்டிக்க அந்த நாடுகளின் நீதிமன்றங்கள் தயங்கியதில்லை. அப்படிப் பலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், இலங்கையில் அப்படியல்ல. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் ஆளும் தரப்பினரால் பாதுகாக்கப்படுகின்றார். இதனால்தான் இங்கு பன்னாட்டு மட்ட விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதுவென்றும் தெரியாத விடயங்களல்ல. ஆனால், அடுத்து வரவுள்ள அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்றால் பௌத்த சிங்கள வாக்குகளைக் கவர வேண்டும் என்றால் இப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும் என்பதற்காகவே அவர் இப்படிக் கூறுகின்றார். இதுபோன்ற மிக மோசமான – கீழ்த்தரமான – அரசியல் செயற்பாடுகளால்தான் இந்த நாடு பல அழிவுகளைச் சந்தித்தது. இந்த முறைமை மாற்றப்படவேண்டும் என்பதை அரசுத் தலைவராகப் பதவியே பின்னர் ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க இப்போது அதே சகதிக்குள் உளலத் தொடங்கியுள்ளார் என்பதை அவரது நேர்காணல் தெளிவுபடுத்துகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் 2022 ஆம் ஆண்டு பன்னாட்டு மட்ட விசாரணை அவசியம் எனக்கூறியவரும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. 2015–2019 வரையான நல்லாட்சி காலத்தில் வெளிவிவகார அமைச்சராக செயற்பட்ட மங்கள சமரவீர ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில், இறுதிப் போர் குறித்த விசாரணைக்கு கலப்பு நீதிமன்றம் (Hybrid court) ஊடாக பொதுநலவாய நீதிபதிகள், நீதி விசாரணையாளர்கள், வழக்குத் தொடுப்போரை உள்ளடக்கிய விசாரணை தேவை என்று முன்மொழிந்தவரும் ரணில் விக்ரமசிங்கவே.

இப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பதைப் போன்று அரசுத் தலைவர் பதவிக்காகவும் அதிகார்த்திற்காகவும் ஜனநாயகத்தைத் தாரை வார்த்துள்ளார்.

## வள்ளலார் என்னும் பெரு வெளிச்சம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்மெல்பேண், அவுஸ்திரேலியா

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும். வையத்துள் வாழ் வாங்கு வாழ வேண்டும். துன்பமில்லா மல் வாழ வேண்டும். குறை வில்லாது வாழ வேண்டும். வாழும் வாழ்வு நிறைவுடையதாக அமைய வேண்டும் என்னும் நோக்கில் தான் சமயங்களும் அதன் வழி முறைகளும் காலத்துக் காலம் வந்தபடி இருந்து கொண்டே இருப்பதைக் காண்கின்றோம். இப்படிவருகின்றசமயங்களில்எது உயர்ந்தது ? எது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது ? எது மிகவும் தீவிரமாக வந்திருக்கிறது ? நடைமுறைக்கு ஒவ்வாதவற்றை எது தாங்கி வந்திருக்கிறது ? என்னும் நிலை மண்ணிலே பூதாகரமாகவே வியாபித்து நிற்பதையும் காணமுடிகிறது.

வேதங்களை முதன்மைப் படுத்திய சமயநெறிகள். சித்தாந்தத்தை முதன்மை படுத்திய சமய நெறிகள்.கட வுளைப் பற்றியே எண்ணாத சமய நெறிகள். அறத்தினையே முழுமையாய் வலியுறுத்தும் சமய நெறி கள்.புராண இதிகாசங்களைநம்பும்சமயநெறிகள். திருமுறைகளை, ஆகமத்தை, ஆலயத்தைமையமாகக்கொண்ட சமயநெறிகள்.உருவவழிபாட்டை முதன்மைப் படுத்தாத சமய நெறிகள்.வேள்வியினைவிரும்பி நிற்கும் சமய நெறிகள்.இல்லறத்தை ஒதுக்கித் துறவறத்தையே முதனிலைப்படுத்தும் சமய நெறிகள்.உருவ வழி பாட்டினை உரித்தாக்கிக் கொண்ட சமய நெறிகள்.இப்படிப் பல சமய நெறிகள் சமுதாயத்தை சூழ்ந்து இருந்தன என்பதைக் கட்டாயம் கருத்திருத்தல் வேண்டும்.

சமய நெறிகள் பல தோன்றி சமுதாயத்தை பல கோணங்கள் ஆக்கி விட்டிருக்கின்றன என்பதையும் மறுத்துரைத்துவிட முடியாது. சமணம்வந்தது. பௌத்தம்–வந்தது. இஸ்லாம் வந்தது. கிறித்தவம் வந் தது.இந்தியாவில் வைதீக நெறியே மேலோங்கி இருந்தது. இந்தியாவுக்கு புதிதாக வந்த சமய நெறிகளா லும். இந்தியாவில் முகிழ்த் தெழுத்த சமய நெறிகளாலும் - வைதீக சமய நெறிகள் சற்று தடுமாற்ற முறுகின்ற நிலை ஏற்பட்டது.ஆனால் வைதீகம் என்பது தன்னிலையில் இறுக்கமாகவே இருந்தது. இருந்தும் வருகிறது என்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும்.

இந்தியாவுக்குள் நுழைந்த சமய நெறிகள் பால் பலர் ஈர்க்கப்பட்டார்கள். அந்த சமய நெறிகளின் வழியில் நடந்திடவும் விரும்பிச் சென்றார்கள். வைதீக நெறியில் மாற்றங்கள் கொண்டுவருவது அவசியம் என்று உணரும் ஒரு நிலையும் அப்பொழுது அவசியமாகக் காணப்பட்டது. அந்தவகையில் கௌதம புத்தர் வருகிறார். மகாவீரார் வருகிறார். தயானந்த சரஸ்வதி வருகிறார். ராஜாராம் மோகன்ராய் வருகிறார். இராம கிருஷ்ண பரமஹம்சரும் வருகிறார்.இவர்களின் சிந்தனைகள் ஒவ்வொன்றுமே வேறுபட்டனவாக இருந் தாலும் , சீர்திருத்தம் என்னும் கருமட்டும் அனைவரது சிந்தனைகளிலும் அமைந்தே இருந்தது என்பது தான் முக்கியமாகும்.

வந்தசமயநெறிகளில்காணப் பட்ட நல்ல சிந்தனைகள் வைதீக சமயநெறியிலேசீராக்கம்செய்திட வேண்டும் என்னும் நிலைக்கு உந்தித்தள்ளுகிறது.கல்வி அறிவின் பெருக்கமும் சிந்தனைகளில் புத்தூக் கத்துக்கு உந்து சக்தியாகிறது.இந்த நிலையில் தமிழ் நாட்டில் இறைவனது பெருங்கருணையினால் மண்ணில்வந்து பிறக்கிறார் வள்ளலார் பெருமான்.

வைதீக சமய நெறியினை மனதில் இருத்திய குடும்பத்தில்தான் வள்ளலார் வந்து பிறக்கின்றார். அவ ரின் உள்ளத்தில் முருகப்பெரு மானே நிறைந்து இருக்கிறார். ஞானப்பாலை மூன்று வயதில் அம்மையின் அரவணைப்பில் உண்ட சீர்காழி தந்த ஞானக் குழந்தை சம்பந்தப் பெருமானைப் போற்றுபவராக வள்ள லார் விளங்கினார். மணிவாசகத்தை மனமுருகப்பாடினார். உருகாதார் மனத் தினையே உருக்கும் திருவாசகத்தைத்




தேனாகக் கருதியே சுவைத்து தன்னையே அதன் வசமாக்கி நின்றார்.

சிறிய வயதில் அன்னையையும் தந்தையும் இழந்து நின்றார். அண் ணனின் அரவணைப்பில் அவர் வாழும் நிலை ஏற்படுகிறது. அண் ணன் வீட்டிலிருந்து பள்ளிப்படிப்பை ஆரம்பிக்கிறார். பள்ளிப் படிப்பில் செல்லும் கவனம் கலைந்து அவரின் கவனம் - தியானம் , யோகம் பக்கமாய் திரும்புகிறது.கல்வியினைக் கற்காமலேயே அவருக்குக் கலைமகள் கருணையினைத் தாராளமாகவே கொடுத்து விடுகிறாள். வள்ளலார் மனத்திலிருந்து கருத்துக்கள் மழையாகக் கொட்டி சிந்தனை வெள்ளமாய் பெருக்கெடுத்தது.

உருவ வழிபாட்டை ஏற்று நின்றவர் மனத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. பரம்பொருளானவன் அருவாய், உருவாய் , அருவு ருவாய் இருக்கிறான் என்றுதான் சமய நெறிகள் சாற்றுகின்றன. வள்ளலார் உள் ளம் மற்றவர்கள் உள்ளத்தைவிட வித்தியாசமாய் சிந்திக்கத் தொடங்குகிறது. எல்லாச் சமயங்களையும் பார்க்கிறார். பார்த்தோடு அமையாமல் அவற்றின் உட்கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்ளுகின்றார். அவர் மனதில் ஒரு புது மாற்றம், புதுத்தெளிவு உதய மாகிறது. அந்தத் தெளிவினால் அளப்பருங் கருணை யுடைய அந்தப் பரம் பொருளை அவர் அளப் பெருஞ் ஜோதியாகவே அகமிருத்தியும் கொள்ளுகிறார். நிறைவில் ஜோதி தரிசனமே அவரின் நிலையாக மாறுகிறது. சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே , ஒளி வளர் விளக்கே. தீபமங்கள ஜோதி நமோ நம என்றெல்லாம் அடியார்கள் அந்தப் பரம்பொ ருளை விழித்ததைப், ஏற்றிப் போற்றியதயெல்லாம் வள்ளலார் மனம் உள்வாங்கிக் கொண்டது. அவர் களே அந்தப் பரம் பொருளினை ஜோதி வடிவில் உருவகப்படுத்தி இருக்கிறார்கள் என்னும் பொழுது நானும் அவர் வழியில் ஜோதி தரிசனத்தைச் சொல்லுவதில் ஏதும் மாற்றுக்கருத்துகள் கொள்ள வேண் டாம் என்று அவர் மக்களைப் பார்த்து புகன்று நிற்கிறார். ஆனாலும் அவரின் இந்த கருத்தினுக்கு எதிர்ப்பாளர்களும் நிறையவே இருந்தார்கள்.

வைதீக சமயம் மேன்மை மிக்கதான கருக்களைக் கொண்டிருந்த பொழுதிலும் , அதனை வழி நடத்த வந்தவர்களின் மனங்களால் விளைந்தவை சமூக நலன்களைப் பாதித்து நின்றதை வள்ளலார் மனம் ஏற்க மறுத்தது. வள்ளலாருக்கு முன்னர் வந்த பலரின் சீர் திருத்தக் கருக்கள் - வள்ளலாரிடம் பதிந்தே இருந்தது. சமத்துவம் இல்லாமை என்பதுதான் வள்ளலார் உள்ளத்தைக் குத்திக் காயப்படுத்திய பெரிய கூரான முள்ளாகவே இருந்தது.அந்தச் சமத்துவத்தை உருவாக்கிட வேண்டும் என்னும் அவா அவரிடம் பேரலையாகவே எழுந்தது.சமரசம் நிலவுவதே சமய நெறிகளின் உயிர் நாடியாக இருக்கவேண்டும் என்பதுதான் வள்ளலாரின் ஆணித்தரமான கொள் கையாகவே அமைந்தது.

பௌத்தத்தின் அட்டசீலம், பஞ்சசீலம், சமணத்தின் அறக் கருத்துகள், இஸ்லாத்தின் சகோதரத்துவம், கிறித்தவத்தின் தொண்டு மனப்பாங்கு யாவற்றையும் வள்ளலார் அகத்திருத்தி தன்னுடைய சமரச சன்மார்க்கப் பாதையினை ஆக்கி நின்றார். வள்ளலாரின் சுத்த சமரச சன்மார்க்க நெறியினை உற்று நோக்கினால் அங்கே வள்ளுவமே கைகொடுத்து நிற்பதையே பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கும். கொல் லாமை,புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, பொய் கூறாமை, துறவு, விருந்தோம்பல், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்னும் உண்மை, அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்னும் கரு, நன்னயம் செய் தல் என்னும் பெருநோக்கு, பழித்தது ஒழித்து விடும் கரு, உற்ற நோய் நோற்றல் உயிக்கு உறுகண் செய்யாமை என்னும் எண்ணம், அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் உயிர் செகுத்து உண்ணாமை என்னும் உயரிய நோக்கு, அத்தனையும் வள்ளலாரின் புது நெறியாக முகிழ்த்து வந்தது எனலாம்.வள்ளலார் சமூகத்தில் மிகவும் சிறப்பான ஒருமைப் பாட்டினை நிலை நிறுத்திடவே தன் வாழ்வெல்லாம் எண்ணியே செயற்பட்டார் என்பதை கருத்திருத்துதல் அவசியமாகும்.

பசிப்பிணி மருத்துவராய் வள்ளலார் விளங்கினார். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பதைவள்ளலார்மிகவும்தீவிரமாகவேமனமிருத்திச்செயற்படுத்தி நின்றார். பசித்தவர்களுக்கு முன்னால் தத்துவங்கள் பயனற்றவை என்பதில் வள்ளலார் பெருதும் உறுதியாகவேஇருந்தார்.அதனால் பசிப்பிணியினைப் பெரும் பிணியாக எடுத்து அதனைப் போக்கு–வதையே தம்முழைய சுத்த சமரச சன் மார்க்க சபையின் முக்கிய குறிக்கோளாக்கி நின்றார் வள்ளலார் எனலாம்.அவரால் தொடங்கப்பட்ட இப்பாரிய பணி இன்றும் அவ ரின் சபையினால் அவரின் அன்பர்களினால் தொடர்கிறது என்பது மனங் கொள்ளத் தக்கதேயாகும்.

துறவியாக விளங்கினார். இயற்கை மருத்துவரானார். ஞானியாக ஒளிவிட்டுப் பிரகாசித்தார். துறவியாக தூய்மையினைக் காட்டி நின்றார்.திருமூலரின் பல சிந்தனைகளை வள்ளலாரும் உள்வாங்கி நின்றார். திருமூலரைப் போலவே கருத் துக்களை நுட்பமாகச், செப்பமாக நல்ல தமிழில் அருமையான பாடல்க ளாக ஆயிரம் ஆயிரமாய்ஆக்கி அளித்தார். அவை அத்தனையும் பல திருமுறைகளாக வகுக்கப்பட்டு திருவருட்பாக்களாக சமூகத்துக்குபெரு வெளிச்சத்தைக் காட்டியபடியே இருக்கின்றன என்பதை மறுத்துரைத்து விடல் இயலாது.

ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும் பெருமை

(8ஆம் பக்கம் பார்க்க..)

# மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் ஓட்டோச் சாரதிகள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சிகுடி ஓட்டோ ஓட்டுனர்கள் தமது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துநேற்று(புதன்கிழமை) களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின்முன்னால்தமது ஓட்டோக்களைக் கொணர்ந்து பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரதேசத்திலேயே இருந்து கொண்டு பிரதேச சபைக்கு வரியைச் செலுத்திக் கொண்டுதமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வரும் தமக்கு வெளி பிரதேசங்களிலிருந்து வரும் ஓட்டோக்களால் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் முற்றிலும்பாதிக்கப்படுவதாகவும், ஆர்ப்பாட்டக்களார்கள் தெரிவித்தனர்.

வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், போராடுவோம், போராடுவோம், நீதி கிடைக்கும் வரைக்கும் போராடுவோம் உள்ளிட்ட கோசங்களை எழுப்பியவாறு அவர்கள் பிரதேச சபையின் வாயிற்கதவை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அவர்கள் மண்முனைதென்எருவில்பற்றுபிரதேச சபையின் செயலாளர் உடன் கவனத்தில் எடுக்க வேண்டும், எமக்குரிய தீர்வை பெற்றுத்தா, மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் உங்கள் கவனத்திற்கு, கிழக்கு மகாண ஆளுனரின் கவனத்திற்கு, உள்ளிட்ட வாசகங்களை எழுதியிருந்த பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

பின்னர் ஆர்ப்பாட்டகளில் 4 பேரையும் பிரதேச சபையின் செயலாளர் சா.அறிவழகன் அவரது காரியாலயத்தினுள் அழைத்ததோடு, கடமையிலிருந்த களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.அபயவிக்கிரமவையும் செயலாளர் அழைத்து பேச்சில் ஈடுபட்டார்.

இதன்போது அனைத்து ஓட்டோக்களுக்கும் ரெக்ஸ் வோட் பொருத்துதல், ஒற்றை நாள்கள். இரட்டை நாட்கள் என மாறி மாறி முச்சக்கர வண்டிகளை உரிய இடங்களில் தரித்து நிற்கச் செய்தல், பிரதேச சபையினால் முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஸ்ற்றிக்கர்களை ஒட்டுதல், மாதம் ஒருமுறை பொலிஸாருடன் முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் சந்திப்பை ஏற்படுத்தல், இதனை பொலிசாரும் பிரதேச சபையயும், முச்சக்கர வண்டி ஓட்டுநர்களும் இணைந்து மேற்கொள்தல் போன்ற தீர்மானங்கள் எடுப்பட்டன. அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (05)

# மகளைக் கண்டித்த ஆசிரியரை தாக்கிய தந்தை உட்பட இருவர்

## பொலிஸாரால் கைது

பாடசாலைக்கு ஒழுங்கான வரவில்லை என மாணவியைக் கண்டித்த ஆசிரியர் மீது மாணவியின் தந்தை உள்ளிட்ட இருவர் செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

பாடசாலைக்கு ஒழுங்கான வரவில்லை எனும் காரணத்தால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவியைக் கண்டித்ததால், அந்த பாடசாலை நிர்வாகத்துடன் முரண்பட்டு, அந்த பாடசாலையில் இருந்து விலகி, பருத்தித்துறை பகுதியில் உள்ள பிறிதொரு பாடசாலையில் இணைந்து கற்றல் நடவடிக்கையை ஆரம்பித்தார்.

புதிதாக சேர்ந்த பாடசாலைக்கும் மாணவி ஒழுங்காக சமுகமளிக்கவில்லை. அதனால் பாடசாலை ஆசிரியர் ஒருவர் மாணவியைக் கண்டித்துள்ளார்.

இந்நிலையில், பாடசாலைக்கு சென்ற மாணவியின் தந்தையும் , பிறிதொருவருமாக பாடசாலைவாசலில் காத்திருந்து, பாடசாலைக்கு வெளியே ஆசிரியர் வந்த போது, ஆசிரியர் மீது சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

அதனால் காயமடைந்த ஆசிரியர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை பொலிஸார் ஆசிரியரைத் தாக்கிய மாணவியின் தந்தை உள்ளிட்ட இருவரைக் கைது செய்துள்ளனர். (05)

# கொழும்பில் வாடகை வாகனம் பிடித்து கால்நடை திருட்டிலீடுபட்ட 6 பேர் கைது



கொழும்பிலிருந்து வாடகை அடிப்படையில் வானை பெற்றுக்கொண்டு அநுராதபுரத்துக்குச் சென்று கால்நடைகளைத் திருடி இறைச்சிக்காக விற்பனை செய்த கும்பலைச் சேர்ந்த 6 பேர் வானுடன் கைது செய்யப்பட்டனர் என அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்பேவ, அநுராதபுரம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 25 வயதுக்கும் 46 வயதுக்கும் இடைப்பட்ட 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சட்ட விரோத மாட்டு வியாபாரத்தின் மூளையாக செயற்பட்ட முன்னாள் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரைக்கைதுசெய்வதற்கானமேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். ஒரு மாதத்துக்கு முன்னர், அநுராதபுரம், யாழ்ப்பாணம் சந்தி பகுதியில் இரண்டு மாடுகள் மற்றும் அநுராதபுரம் பகுதியில் மூன்று மாடுகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின்போது, இந்த திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வான் வெலிசறையைச் சேர்ந்த ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhepees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மத உரிமை மறுப்பை தட்டிக்கேட்கும் உரிமை ஏனைய நாடுகளின் எம்.பிக்கும் உள்ளதாம்

## சாணக்கியன் தெரிவிப்பு











கடந்த சில நாள்களாக மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் சர்வதேச குழுவால் நடத்தப்படும் செயல்திட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பங்கேற்றார்.

இதில் பல நாடுகளில் இருந்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள்.

இதுதொடர்பில்சாணக்கியன்கூறுகையில்-

எமது நாட்டில் மதங்களுக்கு இடையில் உரிமை மறுக்கப்படும்போது அதனைத் தட்டிக் கேட்கும் சில உரிமைகள் சர்வதேச ரீதியிலான ஏனைய நாடுகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு.

குறிப்பாக, தொல்பொருள் எனும் பெயரில் கூடுதலாக இந்துக்களின் உரிமை மறுக்கப்படுவது, மதத் தலைவர்களைக் கைது செய்வது, பௌத்த பிக்குகள் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத மற்றும் இனவாத கருத்துக்களை வெளியிடுவது, ஐசிசிபிஆர் -சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை என்னும் சட்டங்கள் இருந்தும் அந்த சட்டங்களை அமுல்படுத்தாமல் இருப்பது போன்ற விடயங்கள் தொடர்பாகவும், கடந்த கால மனித உரிமை மீறல்கள், ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பாகவும் ஒரு சர்வதேச குழு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இக்களம் எமக்கு பேருதவியாக இனிவரும் காலங்களில் இருக்கும்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயல்திட்டங்கள் மூலமே எமது நாட்டுக்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க ஏதுவாக இருக்கும். -என்றார்.

(05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



## 2024இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் தற்போது, சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் தொடர்பில் எதிர்பார்த்துள்ளதுடன் அது குறித்துகலந்துரையாடல்களில் ஈடுபட்டும் வருகின்றோம். குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் எமக்கு வழங்கிய இலக்குகள் தொடர்பிலான மதிப்பீடுகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நாம் இந்த விடயம் தொடர்பில் மிகச்சரியான தீர்மானங்களை எடுத்துள்ளதுடன்இதற்காகமுறையான தலைமைத்துவத்தையும் வழங்கியுள்ளோம். ஒரு சில விடயங்கள் தொடர்பில் கால தாமதங்கள் ஏற்பட்டாலும் கூட, குறிப்பாக அரச வருமானம் ஈட்டல் குறித்து பல்வேறு சிக்கல்கள் தோன்றினாலும் நாம் அரசாங்கம் என்றவகையில் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதோடு, பல்வேறு கொள்கை ரீதியிலான தீர்மானங்களையும் எடுத்துள்ளோம்.

இதுபோன்ற செயற்பாடுகளால்தான் கடந்த வருடம் இருந்த நிலையை விட தற்போது இந்நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெற்றுவருகின்றது. 94 சதவீதமாக இருந்த உணவுப் பற்றாக்குறை தற்போது -5.1வரை குறைக்க எம்மால் முடிந்துள்ளது. மேலும், 30 - 32சதவீதமாக உயர்ந்த வங்கி வட்டி வீதத்தை, 15 -16 சதவீதம் வரை குறைக்க முடிந்துள்ளது.

இதனால் இந்நாட்டிள் உள்ள தொழில் முயற்சியாளர்களும், வர்த்தகர்களுக்கும் எதிர்கொண்ட பெரும்அழுத்தம் தற்போது நீங்கியுள்ளது. இதன்மூலம் மீண்டும் இந்நாட்டின் பொருளாதாரம் செயற்திறன்மிக்க வகையில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

அதேபோன்று, எமக்கு இருந்த பெரும் சிக்கல்தான் இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை. இதனால் சர்வதேச ரீதியில் நாம் மேற்கொண்டிருந்த வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் கேள்விக்குறியானது மாத்திரமன்றி உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களும், உற்பத்தியாளர்களும் பாதிக்கப்பட்டனர். நாம் உள்நாட்டு பயன்பாட்டுக்கு மட்டுமன்றிஏற்றுமதிக்காகவும் உற்பத்திகளை மேற்கொள்கின்றோம்.

ஏற்றுமதிப் பொருட்களுக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய முடியாவிட்டால், ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியடையும். இதற்கு இரண்டு பக்கங்கள்உள்ளன. தற்போது வாகன இறக்குமதி தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டை கட்டம் கட்டமாக நீக்கி வருகிறோம். வாகன இறக்குமதி தொடர்பிலும் பொதுப்போக்குவரத்து மற்றும் தொழிற்துறைக்கு அவசியமானவாகனங்களை இறக்குமதிசெய்வது குறித்தும் கலந்துரையாடியுள்ளோம்.

மேலும்எதிர்வரும்வருடம் சாதகமானபொருளாதாரத்தை நோக்கிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. இந்த வருடத்தின் இறுதிக் காலாண்டில் பொருளாதார சுருக்கத்தைக் குறைப்பதற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். தற்போது எதிர்வு கூறப்பட்டுள்ளதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டு எமக்கு 1.8 அல்லது 1.9சதவீதம் வரையிலான சாதகமான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைய முடியும் என்று எதிர்பார்த்துள்ளோம். இதன் ஊடாகதாங்க முடியாத வாழ்க்கைச் செலவு உட்பட ஏனைய பொருளாதார சுமைகளையும் குறைக்க முடியும்.

அதேபோன்று, பெருமளவில்அதிகரித்தபணவீக்கத்தை இவ்வளவு விரைவாக குறைக்க முடியும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரசாங்கம் எடுத்த கொள்கை ரீதியிலான பல்வேறு தீர்மானங்களால் இந்நாட்டின் பொருளாதாரம் மீட்சி அடைந்ததுடன் பணவீக்கத்தைதனிஇலக்கத்துக்கு கொண்டு வரவும் முடிந்துள்ளது - என்றார்.

## லிற்றோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலைகளைக் கருத்தில் கொண்டு, விலை திருத்தச் சூத்திரத்தின்படி, புதிய விலை திருத்தம்அமுல்படுத்தப்பட்டது.

இறுதியாக கடந்த மாதம் 4ஆம் திகதி லிற்றோ எரிவாயுவின் விலை திருத்தப்பட்டு12.5கிலோகிராம் நிறையுடைய கொள்கலன் எரிவாயுவின் விலை 145 ரூபாவினால்அதிகரிக்கப்பட்டு 3,127 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன், 5 கிலோகிராம் நிறையுடைய கொள்கலன் எரிவாயுவின் விலை 58 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு, 1,256 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

அதேநேரம் 2.3 கிலோகிராம் நிறையுடைய லிற்றோ சமையல் எரிவாயுவின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 587 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது என்றார்.

இதேவேளை, லாஃப்ஸ் எரிவாயுவின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. குறித்த விலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் எனவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய,12.5 கிலோ கொள்கலன் எரிவாயுவின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 3,985 ரூபாவாகும். 5 கிலோ கொளகலன் எரிவாயுவின் விலை 60 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,595 ரூபாவாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாட்டைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியவை என்ற நிலைப்பாட்டைத் தாம் கொண்டிருக்கிறார் எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்திற்கு நேற்றையதினம் வருகை தந்திருந்தஜனாதிபதி,சபையில் விசேடகூற்றை முன்வைத்து உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான்சரியென்றுஇரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் கூறுகின்றனர். அப்படியென்றால் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். ஏன் எங்களுக்கு இணைந்து செயற்பட முடியாது?.

நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. இந்த நேரத்தில் இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்தே நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் எம் அனைவருக்கும்ஒரே அச்சுறுத்தலே உள்ளது. அதில் இருந்து மீள்வதற்கு வேறு வேலைத் திட்டங்கள் இருக்குமாக இருந்தால் அதனை கூறுங்கள். ஆனால் யாரும் வேலைத்திட்டங்களை முன் வைக்கவில்லை.

தற்போதையகொள்கைத் திட்டங்களை இரண்டு தரப்பில் உள்ளவர்களும் ஏற்றுக்கொள்வதால் இரண்டு தரப்பினரும்ஒன்றாகவேலை செய்துநாட்டுக்குகாட்டுவோம் - என்றார்.

இதனையடுத்து சுதந்திரமான பொது அமைப்பொன்றின் கீழ் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றைப் பராமரிப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எரான்விக்ரமரத்னஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடத்தில் நேரடியாக கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அவர், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய இருப்பை வெளிநாடுகளில் முதலிட முடியுமா என்பது குறித்து ஆராயவிருப்பதாகவும் எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து எதிர்கட்சிகளுடன் விவாதிக்கத் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

குறித்தநிதிவெளிநாடுகளில் முதலிடப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் கொண்டிருக்கின்றோம். தற்போது ஊழியர்நம்பிக்கை நிதியம்மத்திய வங்கி மூலமாகவும்ஊழியர்சேமலாபநிதியம் தொழிலாளர் திணைக்களத்தின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றன - என்றார்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்திவு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய ரி.சரவணராஜா தன்னுடைய கடமை நிமித்தம் ஆற்றிய சேவைக்காக அல்லது ஆற்றிய பணிக்காக அதிகார வர்க்கத்தினாலே அச்சுறுத்தப்பட்டு இன்று நாட்டை விட்டு வெளியேற வேண்டிய ஒரு துர் பாக்கியநிலைமைக்குஉள்ளாக்கப் பட்டு இருக் கிறார்.

இந்தச்சம்பவம்மிகவேதனையானது மாத்திரமல்ல, இலங்கையில்இருக்கக்கூடிய அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு துயரமான, நிதித்துறை வரலாற்றிலேயேகாறைபடிந்த கறுப்பு சம்பவமாக நாங்கள் இதனைப் பார்க்கின்றோம். இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்பு வெளியிடுகின்ற விதமாக வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மாகாணங்கள்இருக்கக்கூடிய அனைத்துசட்டத்தரணிகளும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தோம்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து சட்டத் தரணிகளும் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு முன்பாகக் கூடி கவணவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தி இருந்தோம். அதன் தொடர்ச்சியாக இன்றைய தினமும் சட்டத்தரணிகள் வடக்கு கிழக்கு எங்கும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இன்றைய தினம் தமிழ் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்ற இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் விதமாக சட்டத்தரணிகள் இந்தப் போராட்டத்தி-ம் கலந்துகொண்டிருக்கின்றார்கள். நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் கூடிய சட்டத்தரணிகள் ஒரு தீர்மானம் எடுத்து இருக்கின்றோம் அதில் பிரதானமாக இரண்டு விடயங்களை நான் சுட்டிக்காட்டலாம் ஒன்று வடக்கு கிழக்கு எங்கும் எங்களுக்கென்று ஒரு சட்டத்தரணி சங்கத்தை உருவாக்குவது தொடர்பில் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம், இரண்டாவது எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பில் உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக இந்த சம்பவத்துக்கு எதிராக கண்டனத்தை வெளியிடும் விதமாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்த முடிவு செய்து இருக்கின்றோம்.

அதிலே இலங்கையினுடைய தாய் சட்டத்தரணிகள் சங்கத்தையும், அனைத்து பிராந்திய சட்டத்தரணிகள் சங்கத்தையும் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளவைக்கும் வாய்ப்புத் தொடர்பில் நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப்போராட்டம் இலங்கை முழுவதும் மட்டுமல்ல உலகத்தினுடைய கவனத்தையும் ஈர்ப்பதற்காக கொழும்பிலே வடக்கு மாகாண சட்டத்தரணிகளால் முன்னெடுக்கின்ற போராட்டமாக அமையும் என்பதை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.



# நாட்டில் கோதுமை மாவின் விலையை ஒழுங்குபடுத்த விலைசூத்திரம் தேவை

## அரச நிதி பற்றிய குழு ஆலோசனை

இலங்கையிலுள்ள களஞ்சியங்களில் தற்பொழுது காணப்படும் கோதுமை மாவின் அளவு தொடர்பில் தடயவியல் கணக்காய்வொன்றை மேற்கொண்டு இவ்விடயம் குறித்து இரண்டு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கினார்.

கோதுமை மாவுக்கு விலைச்சூத்திரமொன்றைப் பேணிவந்தால் ஒவ்வொருவரும் தமக்கு விரும்பியவாறு விலைகளைத் தீர்மானிப்பதற்கு இடமளிக்காமல் இருக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ சில்வா தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுவிலேயே இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை முழுவதிலும் உள்ள வணிக நிலையங்களில் வெள;வேறு விலைகளில் கோதுமை மா விற்பனை செய்யப்படுவதாக குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இருந்தபோதும் நிதி அமைச்சு வழங்கிய விலைக்கு அமைய ஒரு கிலோ கோதுமை மாவை 198 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கோதுமை மாவின் விலையை நிர்ணயிப்பதில் இரண்டு விலைக் கணக்கீடுகள் பயன்படுத்தப்படுவதாகவும் இந் நிலை மாற்றப்பட வேண்டுமெனவும் தலைவர் வலியுறுத்தினார்.

கோதுமை மாவிற்கு விதிக்கப்பட்டுள்ள வரி அதிகரிக்கப்பட்டுள்ளமையால் விலை அதிகரித்துள்ள போதிலும் ஏற்கனவே இலங்கையிலுள்ள களஞ்சியங்களில் காணப்பட்ட கோதுமை மாவுக்கும் புதிய வரியையும் உள்ளடக்கியதாக விலை அதிகரிக்கப்பட்டு விற்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் சமையல் எரிவாயு மற்றும் பால் மாவுக்கான விலை சூத்திரத்தை தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நினைவுபடுத்திய குழுவின் தலைவர், கோதுமை மாவின் விலையைஒழுங்குபடுத்த விலைச்சூத்திரம் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார். மேலும் பன்முகத்தன்மையை சமாளிக்கும் வகையில் விலை சூத்திரம் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியது.

அத்துடன் சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் மேலும் பல பொருள்களுக்கான வரிகளைக் குறைப்பதற்கும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

2023ஆம் ஆண்டு ஜூன் 30ஆம் திகதிய 2338-54 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை பற்றிக் கலந்துரையாடும்போதே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.



இதற்கு அமைய 15 சதவீதமாக இருந்த வரி விகிதம் 5 சதவீதமாக குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியை வழங்கிய குழு இந்த வர்த்தக ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தது.

இதற்குப் பதிலளித்த அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் சாத்தியக்கூற்று ஆய்வு நடத்தப்படவில்லையெனத் தெரி வித்தனர்.

இது விடயத்தில் தனது அதிருப்தியை வெளிப்படுத்திய குழுவின் தலைவர், இந்த ஒப்பந்தம் குறித்த தர்க்கரீதியான விடயங்களை முன்வைத்து 6 வாரங்களுக்குள் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்குப் பொறுப்பான அதிகாரிக்குப் பணிப்புரை விடுத்தார்.

1962 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2336-72ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரண்டாவது தடவையாகவும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு அனுமதி வழங்குவதில்லையெனக் குழு தீர்மானித்தது. இங்கு சவர்க்கார உற்பத்திக்குத் தேவையான

மூலப்பொருள்களை இறக்குமதி செய்வது தொடர்பான எச்எஸ் குறியீட்டை மாற்றுவதற்கான முன்மொழிவை அதிகாரிகள் முன்வைத்தனர்.

இந்த முறையின் மூலம் தொடர்புடைய மூலப்பொருள்களின் இறக்குமதி மீதான வரி விகிதங்கள் அதிகரிக்கப்படுமா எனக் குழு கேள்வி எழுப்பியது. இதற்கமைய அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் வரியைக் குறைக்குமாறும், மற்றொரு பிரிவினர் வரியைக் கூட்டுமாறும் குழுவின் அனுமதியைக் கோருவது சிக்கலுக்குரியது என்றும் தலைவர் சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டுக்காக சவர்க்கார உற்பத்திக்குத்தேவையானமூலப்பொருளை இறக்குமதி செய்யும்போது வரி குறைக்கப்பட்டாலும் அக்காலப்பகுதியில் எந்தவொரு இறக்குமதியும் மேற்கொள்ளப்படவில்லையெனக் குழு முன்னிலையில் தெரியவந்தது.

இதற்கு அமைய நிதி அமைச்சின் செயலாளர் தலைமையில் கூடி வரி தொடர்பில் குறிப்பிட்ட ஒரு கொள்கையைத் தயாரித்து அதனைக் குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். அதேநேரம் 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான வரித் திருத்தங்கள் குறித்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களுக்கும் குழு அனுமதி வழங்கியது.

அத்துடன் கசினோ ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை நிறுவுவது தொடர்பான செயற்பாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் சிங்கப்பூரில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு மற்றும் இலங்கையில் தற்போதுள்ள சில நிறுவனங்களுடன் கலந்துரையாடி ஒரு சட்டமூலமொன்றைத் தயாரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் இறுதிச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு முன்னர் வரைவை அரசாங்க நிதி பற்றிய குழுவின் அனுமதிக்கு அனுப்பிவைக்குமாறும் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இதன்படி கசினோ ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பில் சிங்கப்பூரில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை மற்றும் இலங்கையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் முறைமை ஆகியவற்றை ஒப்பீடு செய்து அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவுக்கு வழங்குமாறும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த காலப்பகுதியில் இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் முதலீடு செய்யப்பட்ட தொகை அவற்றினால் கிடைக்கப்பட்ட நன்மைகள் உள்ளிட்ட விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் குழு, இலங்கை முதலீட்டுச் சபைக்குப் பணிப்புரைவிடுத்தது.

ஏனைய விடயங்கள் குறித்து குழு கவனம் செலுத்தியபோது வெளிநாடுகளிலிருந்து பாக்கு இறக்குமதி செய்யப்பட்டு இங்கு பெறுமதி சேர்க்கப்பட்டு மறு ஏற்றுமதி செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா இலங்கை முதலீட்டுச் சபையிடம் வினவினார்.

இவ்விடயம் இராஜதந்திர ரீதியான பிரச்சினைவரையில் செல்வதற்கான ஆபத்து இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதற்கமைய குறித்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினருக்கு அறிவிக்குமாறு இலங்கை முதலீட்டுச் சபையிடம் உறுப்பினர் கோரிக்கை விடுத்தார். (05)



## இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்தார் வடக்கு ஆளுநர்

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை கொழும்பில் அமைந்துள்ள இந்தியா இல்லத்தில் சந்தித்தார்.

சந்திப்பின் போது ஆளுநர் வடக்கின் எதிர்கால வளர்ச்சி குறித்து தாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார். அதேவேளையில் இந்திய அரசாங்கம் கடந்த காலங்களில் வழங்கிய ஆதரவிற்கு தமது நன்றியையும் தெரிவித்தார்.

உயர்ஸ்தானிகர் வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் வடக்கின் அபிவிருத்திக்கும் தங்களது தொடர்ச்சியான ஆதரவு உறுதி என்று கூறினார். (05)

## வவுனியா செட்டிகுளம் பகுதியில் ஆலய சிலைகள் விசமிகளால் பெயர்த்தெடுப்பு!



வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சிலைகள் விசமிகளால் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் நவக்கிரக விக்கிரகங்கள் மற்றும் வைரவர், முருகன், அம்மன் விக்கிரகங்கள் இருப்பிடங்களில் இருந்து பெயர்த்து எடுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) காலை ஆலயத்துக்கு பூஜைக்காக சென்ற ஆலயத்தின் குருக்கள் சிலைக்கள் சேதமாக்கப்பட்டமையை அவதானித்த உடன் ஆலய நிர்வாகத்தினருக்கு அறிவித்திருந்தார். பின்னர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## காட்டு யானை தாக்கியதில் சம்மாந்துறையில் பெண் பலி!

காட்டு யானையின் தாக்குதல் காரணமாக குடும்ப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்னாகாடு வம்பியடி பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்டு யானை தாக்குதலில் தனது குடும்பத்துடன் கல்முனையில் இருந்து நிந்தவூர் வழியாக இறக்காமம் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் இரவு வேளை பயணம் செய்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இறக்காமம் பகுதி 9 ஆம் பிரிவைச் சேர்ந்த 43 வயதுடைய புஹாரி சரீப் சிபானி என்ற 3 பிள்ளைகளின் தாயாவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுவருவதுடன் உயிரிழந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. (05)

## லொறி பள்ளத்தில் வீழ்ந்ததில் பயணித்த 22 பேர் காயம்

மஸ்கெலியா- சாமிமலை பிரதான வீதி, பிரன்சுவிக் தேயிலை தோட்டத்தின் குயின்ஸ்லாந்து பகுதியில், சிறிய ரக லொறியொன்று வீதியிலிருந்து விலகி சுமார் 40 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 22 பேர் காயமடைந்து மஸ்கெலியா மற்றும் டிக்ஓயா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மஸ்கெலியா, பிரன்சுவிக் தேயிலைத் தோட்டத்தின் குயின்ஸ்லாந்து பிரிவில் உள்ள படஞ்சி தோட்டத் தொழிலாளர்களே காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 17 பெண்களும் 5 ஆண்களும் அடங்குவர். காயமடைந்த 17 பேர் முதலில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக் ஓயா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மஸ்கெலியா வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரி இர்ாத் தெரிவித்தார். (05)

## இலங்கையின் தேசிய கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழக பீடங்களாக தரமுயர்த்த முடிவு

இலங்கையில் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக்கும் நோக்கில் தற்போது நடைமுறையிலுள்ள கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகப் பீடங்களாக உயர்த்துவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நிர்வாக மற்றும் சட்டப் பொறிமுறைகள் தொடர்பாகப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக 2019.12.04 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மூத்த பேராசிரியர் குணபால நாணயக்கார தலைமையில் நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்தகுழுவின்பரிந்துரைகள் தற்போதுள்ள 20 கல்வியியல் கல்லூரிகளில் 19 கல்லூரிகளை பல்கலைக்கழக வளாகமாக உயர்த்துவதற்கும், அத்துடன் இலங்கை கல்வியியல் பல்கலைக் கழகம் எனும் பெயரில் புதிய பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கும் ஏதுவான சட்ட ஏற்பாடுகளை விதிப்பதற்கு புதிய சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

## ரயில்வே திணைக்கள ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகள் சங்கம் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு

ரயில்வே திணைக்களத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகள் சங்கம் புதன் கிழமை காலை முதல் தொழிற் சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர் என ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதன்கிழமை காலை மாளிகாவத்தை ரயில்வே வேலைத்தளத்தில் பிரதி கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் ரயில்வே பாதுகாப்பு சேவை அதிகாரி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக்கு காரணம் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

பிரதி கட்டுப்பாட்டாளரை தாக்கியதாக கூறப்படும் ரயில் பாதுகாப்பு சேவையின் நிரந்தர ஊழியரை பணி இடைநிறுத்துமாறு ஒழுங்குபடுத்தும் தொழிற்சங்கம் கோரி வருவதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir


JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்

## ஒன்லைன் ரக்சி அப்

ONLINE TAXI APP FROM JAFFNA



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



+94 21 222 8358

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# அஜித் நிவார்ட் கப்ரால், லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிரான வழக்கில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தான் பிரஜைக்கு 6.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை பொது நிதியாக வழங்கி, குற்றச் செயலில் ஈடுபட்டதாக தினியாவல பாலித தேரர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் என்ற வகையில், எவ் வித அங்கீகாரமும் இன்றி, இலங்கை மத்திய வங்கிக்கு பாகிஸ்தான் பிரஜைக்கு குறித்த தொகையை வழங்குமாறு, உடன்படிக்கை செய்துகொண்டார் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தமுறைப்பாட்டில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனக் கூறி இந்த வழக்கை நேற்று (புதன்கிழமை) தள்ளுபடி செய்யுமாறு நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். (05)

# பண மோசடிகளில் ஈடுபட்ட பொலிஸ் பரிசோதகர் கைது

நீர்கொழும்பு குடாப்பாடு பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் பணத்திற்காக சூதாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் கைப்பற்றப்பட்ட பணத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்காமல் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஒழிப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் பரிசோதகரால் கைப்பற்றப்பட்ட பெருந் தொகை பணத்தில் ஒரு பகுதியை இவர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படாமை உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் பரிசோதகரால் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத்தாமல் பணமோசடி செய்யப்பட்டுள்ளதாக அப்பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக நீர்கொழும்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணையை மேற்கொண்டு உதவி பொலிஸ் பரிசோதகர் பணியை இடைநீக்கம் செய்துள்ளார். (05)

# முல்லேரியாவில் மீட்கப்பட்ட பெண் சடலம்: உடலை துண்டித்து காரில் எடுத்துச் சென்றோம்

## சந்தேகநபர் வாக்குமூலம்

முல்லேரியாவில் தலை மற்றும் கை கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் சரணடைந்த இருவரில் ஒருவரான வர்த்தகர் வழங்கிய வாக்குமூலத்துக்கும் மற்றையவரின் வாக்குமூலத்துக்குமிடையில் முரண்பாடுகள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இவர்கள் தொடர்பில் மஹர நீதிமன்றுக்கு சப்புகஸ்கந்த பொலிஸார் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இருவரையும் 72 மணிநேரம் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இரண்டாவது சந்தேக நபரான ரோஹித்த குமார என்பவர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் குறித்த பெண், வர்த்தகரை அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கு தொல்லை கொடுத்து அவரது நிம்மதியைக் குலைத்தார் எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில், இந்தப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்றுதான் வர்த்தகரிடம் கூறியதனையடுத்து ஒரு கத்தியை தயார் செய்ததாகவும் பொலிஸாரிடம் ரோஹித்த குமார தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் வர்த்தகர் குறித்த பெண்ணை அவரது காரில் சபுகஸ்கந்த வீட்டுக்கு அழைத்து வந்ததாகவும் அங்கு சென்ற பெண், வர்த்தகரின் வீட்டிலிருந்து வெளியேறியபோது கத்தியால் பெண்ணை தாக்கினார் எனவும் இதன்போது அவர் உயிரிழந்தார் எனவும் ரோஹித்த குமார பொலிஸாரிடம் மேலும் தெரிவித்தார்.

பின்னர் தான் வர்த்தகருடன் இணைந்து உயிரிழந்த பெண்ணின் உடலைத் துண்டித்து அதனை அன்றிரவு வர்த்தகரின் காரில் எடுத்துச்சென்று உடலையும் மன்னா கத்தியையும் கால்வாயில் வீசியதாகக் ரோஹித்த குமார தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் 51 வயதுடைய டி.ஜி. பிரதீபா என்ற பெண்ணே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். (05)

# முல்லைதீவு வைத்தியசாலையின் என்டோஸ்கொப்பி இயந்திரம் குறித்த செய்தியில் உண்மையில்லையாம்

முல்லைதீவு வைத்தியசாலையின் அகநோக்கி (என்டோஸ்கொப்பி) இயந்திரம் தொடர்பில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது அனுராதபுர வைத்தியசாலையில் பழுதடைந்துள்ள அகநோக்கி உபகரணத்திற்கு பதிலீடாக முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு புலம்பெயர் தமிழர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட அகநோக்கிக் கருவியினை கையளிக்குமாறு மத்திய சுகாதார அமைச்சு கோரவுள்ளதாக சமூக ஊடகங்களிலும் சில இணையத்தளங்களிலும் பரப்பப்படும் செய்தி உண்மைக்கு புறம்பானது என முல்லைத்தீவு (மாஞ்சோலை) வைத்தியசாலைபதில்பணிப்பாளர் சண்முகராசா அவர்களைத் தொடர்புகொண்டு வினவியபோது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் குழப்பமடையத்தேவையில்லை என்றும் தெரிவித்துள்ள அவர் இதுவரை அவ்வாறான எந்தவொரு நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அவரது தகவலின் படி முல்லைத்தீவு வைத்தியசாலையில் தற்போது இரண்டு அகநோக்கிக் கருவிகள் உள்ளன. அவற்றில் ஒன்று 2012 ஆம் ஆண்டு இந்திய அரசால் நன்கொடையாக வழங்கப்பட்டது. அது தற்போது செயலிழந்துள்ளதால் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது அகநோக்கிக் கருவி, இலங்கை அரசின் நிதி ஊடாக பெறப்பட்டது. அது தற்போது பாவனையில் உள்ளது. புலம்பெயர் மக்களால் முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அகநோக்கிக் கருவி எதுவும் நன்கொடையாக இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர், 'மத்திய சுகாதார அமைச்சிடம் இருந்தோ அல்லது வேறு எவரிடம் இருந்தோ அனுராதபுர வைத்தியசாலைக்கு எமது அகநோக்கிக் கருவியைக் கையளிக்குமாறு கோரிக்கை விடப்படவில்லை' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே இது தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் அதிகாரியொருவரை தொடர்புகொண்ட போது 'இது முற்றிலும் ஆதாரமற்ற தகவல்' எனத் தெரிவித்தார். (05)

# வள்ளலார் என்னும் பெரு வெளிச்சம்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)



பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாது இருக்க வேண்டும்
பெரு நெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும்: நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்
தரும மிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவ மணி
சண்முகத் தெய்வமணியே! சண்முகத் தெய்வமணியே!

சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே!

இப்பாடல்கள் வாயிலாக வள்ளலாரின் ஆரம்ப நிலையினைக் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கிறதல்லவா!

ஒன்றும்அலார் இரண்டும்அலார் ஒன்றிரண்டும் ஆனார்
உருவும்அலார் அருவும்அலார் உருஅருவும் ஆனார்
அன்றும்உளார் இன்றும்உளார் என்றும்உளார் தமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ்சோ தியினார்
என்றுகனல் மதிஅகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவும்இலார் யாவும்உளார் யாவும்அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர் உண்டே கண்டீர்.

ஏகன் அநேகன் என்னும் கருத்தில், ஏகன் என்பதையே வள்ளலார் அகதில் உறுதியாக்கிக் கொண்டிருந்தார். அவரின் மனதில் பல சிந்தனைகள் மலர மலர கடவுள் பற்றிய கொள்கைகளையும் மாற்றியவராகவே வள்ளலார் வந்து நிற்கிறார் என்று அவரின் பாதையினைப் பார்க்கும் பொழுது அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுப
நீதியில் ஆச்சிர நீட்டென்றும் – ஓதுகின்ற
பேயாட்டம் எல்லாம் பிதிர்த்தொழத்தலேபிறர்தம்
வாயாட்டம் தீர்த்தன்வே மற்று
வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் – சூதாகச்
சொன்ன வலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இலை.

வள்ளலாரின் கருத்தோட்டங்கள் எவ்வாறு பரிணமிக்கின்றன என்பதற்கு அவரே தன்னுடைய பாடல்களை எமக்கு வழங்கி நிற்கிறார். சாதியினைச் சாடுகிறார். வேதாகமங்களை மிகவும் கடுமையாக எதிர்க்கும் நிலை வள்ளலாரிடம் ஏன் ஏற்பட்டது என்பதற்கு - அவரின் சீர்திருத்த மனப்பாங்குதான் என்றே கருதைட வைக்கிறதல்லவா!

பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை
முத்தி பெற்றிடவும் பெற்றிலேன்
உரியதோர் இச்சை எனக்கிலை என்தன்
உள்ளம் நீ அறிந்ததே எந்தாய்
ஆதலால் இரக்கம் பற்றி நான் உலகில்
ஆடலே யன்றி ஓர்விடயக்
காதலால் ஆடல் கருதிலேன் விடயக்
கருத் தெனக் கில்லை

வீடும் வேண்டா விறலினராகவும் வள்ளலார் தன்னை இங்கே வெளிப்படுத்தி நிற்கின்றார். முத்தியே வேண்டா நிலை என்பதே மிகவும் உன்னதமான நிலை என்று சேக்கிழார் பெருமானே சுட்டிக் காட்டி நிற்பது இங்கு நோக்கத்தக்கதேயாகும்.

மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்
புணைந்துரையோ பொய்புகலேன் சத்தியஞ் செய்கின்றேன்
இயற்றிதனைத் தடுத்திடலாம் என்னோடுஞ் சேர்ந்திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே

தன்னால் உருவாக்கப்பட்ட மார்க்கத்தை எந்த அளவுக்கு உறுதியானது, பயனானது, புதிய சிந்தனைகளைக்கொண்டது என்பதை தனது பாடல் வாயிலாகவே எவ்வித அச்சமுமின்றி துணிவாய் வெளிப்படுத்தி நிற்பதைக் கருத்திருத்த வேண்டியது முக்கியமாகும். மரணமிலாம் பெருவாழ்வு என்பதைச் சொல்வதற்கு எவ்வளவு மனவுறுதியும், தெளிவும் வேண்டும். அந்தத் தெளிவும் உறுதியும் மிக்கவராய் வள்ளலார் விளங்கி இருந்திருக்கிறார்.

செத்தாரை எழுப்புவேன் என்றார். சித்துக்கள் செய்யும் சித்தராயும் விளங்கினார். செத்தாரை எழுப்புவேன் என்பதைப் பலருமே தவறாக விளங்கிக் கொண்டு – அவரையே பல வேளைகளில் வருந்திடும் வண்ணம் செய்திருக்கிறார்கள் என்றும் அறிய முடிகிறது. உயிரோடு வாழ்கின்ற பலர் நல்ல சிந்தனைகளை தூக்கி எறிந்து விட்டு, தனக் கும் பயனில்லாமல், மற்றவர்களுக்கும் பயனில்லாமல், ஏன் சமுதாயத்துக்கே பயனில்லாமல் வாழுவதைக் காண்கின்றோம். அப்படியானவர் உயிருடன் வாழ்ந்தாலும் அவர்களைச் செத்தார் என்றுதான் கணக்கில் எடுத்திட வேண்டும். அப்படியானவர்களுக்கு நல்ல உபதேசங்களைச் செய்தால் அவர்களை நல்லுணர்வுள்ளவர்களாக எழுச்சி பெறச் செய்து விடலாம் என்னும் கருத்தில்த்தான் வள்ளலார் செத்தாரை எழுப்பலாம் என்று சொன்னார் என்பதுதான் உண்மை நிலையாகும்.

வள்ளலாரின் கொள்ளைகைகளை நிறையவே பலரும் விமர்சித்தார் கள். அவரின் கொள்கைகள் ஏற்பதற்குக் கஷ்டமாக இருந்தும் இருக்க லாம். ஆனால் அவர் தான் கொண்ட கருத்தைமட்டும் எதற்காகவும், யாருக்காகவும் மாற்றிவிட நினைக்கவே இல்லை. தன் மனத்துதித்த சீர் திருத்தங்களை உள்ளடக்கி தன்னுடைய சுத்த சமரச சன்மார்க்க நெறியினை முன்வைத்தார்.

அதனை நடைமுறைப்படுத்தவும் தன் காலத்தில் அவர் செயற்பட்டு நின்றார். அவருக்கென்றே ஒரு அடியார் திருக்கூட்டமும் திரண்டது. அவரின் ஜோதி வழிபாட்டினையும் ஆத ரித்தும் நின்றது. இன்றும் அந்த ஜோதி தரிசன வழிபாடு நிற்காமலே நடந்த படியேதான் இருக்கிறது என்பது முக்கியமாகும்.

சைவத்திருமுறைகளை நாமனைவரும் ஏற்றிப் போற்றுகின்றோம். வள்ளலாரின் அருட்பாடல்களும் திருமுறைகளாகப் பலராலும் போற்றப்பட்டு வருகிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதே. அன்னைத் தமிழை நேசித்தார். அந்த தமிழில் அரிய தத்துவக் கருத்துக்களை எமக்கெல்லாம் அள்ளியும் வழங்கினார். தமிழால் தன்கருத்துக்க ளைக் கூறுவதையே அவர் பெருமையாகவும் பெரும் பேறாகவுமே எண்ணினார். விமர்சனங்கள் பல - அவரின் கொள்கைகளுக்கும், அவரின் அருட்பாடல்களுக்கும் முன்வைக்கப்பட்டாலும் அவர்; ஞானியாக, யோகியாக, சீர் திருத்தச் செம்மலாக, சமூகத்தின் அழுக்குகளை அகற்றவந்த சமூக மருத்துவராக, எல்லாவற்றுக்கும் மேலாக இந்த மாநிலம் பயனுறவந்த பெருவெளிச்சம் ஆகவே ஆகியிருக்கிறார் என்பதுதான் உண்மையாகும்.

# திடீரெனத் திறந்த கார் கதவு எமனானது குடும்பஸ்தருக்கு

யாழ்ப்பாணம் - காங் கேசன்துறை வீதி உப்புமடம் பகுதியில் நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவு திடீரென திறக்கப்பட்டபோது வீதியால் மோட்டார் சைக்கிள் பயணித்தவர் அதில் மோதுண்டு விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த லோகராசா தர்சன் என்ற குடும்பத்தலைவரே விபத்தில் உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன் விபத்துக்கு காரணமான காரினை அங்கிருந்து எடுத்து செல்ல முற்பட்ட போது அப்பகுதியில் கூடியவர்கள் பொலிஸாருடன் முரண்பட்டனர்.

உரிய விசாரணைகள் இடம்பெறாது சடலத்தை அப்புறப்படுத்தியதுடன் விபத்துக்கு காரணமான காரினை பொலிஸார் எடுத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது என அவர்கள் தெரிவித்தனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

காரின் சாரதி பொலிஸில் சரணடைந்துள்ளார் என்று பொலிஸாரால் அங்கிருந்தவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.10.2023இல் வெளியிடப்பெற்றது.